
# சைவத் திருக்கோயில் கலை கல்வி அற வாரியம்

## திருப்பணிகள் தொடங்கின!



சைவத் திருக்கோயில் கலை கல்வி அற வாரியத்தின் திருப்பணிகள் ஆலவாய் அண்ணல் திருவருள் துணையால் இனிது தொடங்கின. மலேசிய சைவ சமயப் பேரவையின் ஆதரவு இயக்கமாகக் கடந்த மூன்று ஆண்டுகளாக அற வாரியம் இயங்கி வருகின்றது.

சிலாங்கூர் மாநிலத்தின் கெர்லிங் நகருக்கு அருகில் அற வாரியத்திற்குச் சொந்தமான ஏழரை ஏக்கர் நிலத்தில் திருக்கோயில் மற்றும் சைவக் கலைக் கல்லூரி ஆகியவற்றை நிறுவும் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனம் தேர்வு செய்யப்பெற்றுள்ளது. அந்த நிறுவனத்தின் தொழில் நுட்பக் குழுவினர் தம் பணிகளைத் தொடங்கியுள்ளனர். அற வாரியத்தின் சார்பாக நம் சித்தாந்த மாணவரில் பணி சார் திறன் கொண்ட மூவர் குழுவினர் செயலாற்றும் நிறுவனத்தின் பணிகளைக் கண்காணித்து அற வாரியத்திற்கு அறிவித்து வருகின்றனர்.

இவ்வேளையில் அற வாரியத்தின் இயக்குநர் குழுவினர் திட்டம் இடையறாது முன்னேறிச் செல்வதற்கான நிதி வளத்தைப் பெருக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கோயில் திருப்பணிகளுக்குப் பங்களிக்க விரும்பும் அடியார் பெருமக்களை அன்புடன் வரவேற்கின்றோம். சைவ ஆகம விதிகளின்படி எழவிருக்கும் திருக்கோயிலில் இம்மைக்கும் மறுமைக்கும் அம்மைக்கும் பயன் தரும் அருட்கடவுளாம் சிவபெருமான் எழுந்தருள இருக்கிறார். எமது சைவ சித்தாந்த மாணவரும் பொதுமக்களும் திருக்கோயில் அமைவுக்குத் தம் காணிக்கையை வழங்கிச் சிவபெருமான் திருவருளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

திருக்கோயில் அருட்கொடையை அற வாரியக் கணக்கில் நேரடியாகச் சேர்க்க விரும்புவோர் அவ்வாறே செய்யலாம்.

**YAYASAN FALSAFAH DAN INSTITUSI SAIVA**
**PUBLIC BANK - 3208616019**

மேலும் விவரங்கள் பெறுவதற்குத் தொடர்பு கொள்க.

**சிவச்செல்வி அனிதா: +60 17 614 0336**

அன்புடன்
**முனைவர் நாகப்பன் ஆறுமுகம்**
தலைவர், சைவத் திருக்கோயில் கலை கல்வி அறவாரியம்

அனைவருக்கும் சிவனருள் நிறைக!

## மலேசிய சைவ சமயப் பேரவையின் சமூக நலப் பணிகள்

### ஈப்போ சைவ சமய மன்றம்








ஆசிரியர் / *Editor:* முனைவர் நாகப்பன் ஆறுமுகம் / Dr. Nagappan Arumugam MA., Ph.D.
***Published by:*** **MATHESAN ENTERPRISE,** A01-02, Palm Court, Jalan Berhala, 50470 Kuala Lumpur. H/P: 016-9691090
***Printed by:*** **PERCETAKAN CL WONG SDN BHD,** AS-84, Jalan Hang Tuah 4, Taman Salak Selatan, 57100 Cheras, Kuala Lumpur

சிவனருள் ஆசிரியர் குழு:
சிவத்தமிழ்செல்வர் முனைவர் நாகப்பன் ஆறுமுகம்,
சிவத்திரு அன்பரசன் அருணாசலம்,
சிவத்திரு கமலநாதன் முனுசாமி